# கலைஞரும் நானும்

## 75

தமிழுக்கு என்ன செய்ய வேண்டும்? தமிழருக்கு என்ன செய்ய வேண்டும்? என இடைவிடாது சிந்தித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். ‘பெருங்கவிக்கோ’ என்று என்னை அழைக்கும் அவர் குரலுக்கு இணையாக, இந்த உலகத்தையே எனக்குத் தந்தாலும் ஈடாகாது என தனது நினைவுகளைப் பகிர்கிறார்,

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்.



# “நான் எப்படிக் கட்சியை மறப்பது?”

‘பெருங்கவிக்கோ’ வா.மு.சேதுராமன்

**பே**ச்சாற்றல், எழுத்தாற்றலில் புதிய மறுமலர்ச்சி உருவாகி, திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டு அரசியலில் வளர்ந்து வந்த காலம். எனது சொந்த ஊரான, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே ஆண்டநாயகபுரம் என்கிற சிற்றூரிலும் தி.மு.க எழுச்சி உருவாகத் தொடங்கி இருந்தது. எங்கள் அண்ணன் ஆதிமூலம் அவர்களால், **‘திராவிட நாடு’**, **‘மன்றம்’** ஆகிய இதழ்கள் அங்குள்ள படிப்பகத்துக்கு வரும்.

1955-ஆம் ஆண்டில் பள்ளி இறுதி வகுப்பு மாணவன் என்பதால், நானும் அந்த அரசியல் மறுமலர்ச்சித் தீயில் ஐக்கியமானேன்.

பேரறிஞர் அண்ணா, நாவலர், கலைஞர் உள்ளிட்ட தி.மு.க முன்னோடிகளின் பேச்சும், எழுத்தும் தமிழுக்கு உரம் சேர்த்தன. அந்தக் காலகட்டத்தில்தான், தூத்துக்குடி பொதுக் கூட்டம் ஒன்றில் முத்தமிழறிஞர் கலைஞரின் உரையைக் கேட்டு சிலிர்த்தேன். கூட்டத்துக்கு வந்திருந்த அண்ணாவைத் தொட்டுப் பார்க்கும் அளவுக்கு அந்த ஈர்ப்பு இருந்தது. அப்போது கே.வி.கே.சாமி என்கிற கழக முன்னோடி படுகொலை செய்யப்பட்டதால், எங்கள் பகுதியே உணர்ச்சிக் கொந்தளிப்பாக இருக்கும்.

### முதல் சந்திப்பும் வாழ்த்தும்

கமுதி வட்டாரம் இஸ்லாமியர்கள் நிறைந்த பகுதி என்பதால், அவர்களிடம் திராவிட இயக்க ஆதரவு இருந்தது. அதனால், நான் படித்தப் பள்ளியில் திராவிட இயக்க ஏடுகள் வாசித்தாலும் கண்டுகொள்ள மாட்டார்கள். அப்படி, கலைஞரின் **‘தூக்குமேடை’** நாடக நூலினை என் புத்தகத்துக்கு அடியில் வைத்துப் படித்திருக்கிறேன். படிப்பு முடிந்து ஓராசிரியர் பள்ளியில் வேலை கிடைக்க, அப்படியே புலவர் பட்டமும் படித்தேன். 1960-ஆம் ஆண்டு காலகட்டத்தில் கழகத்தில் உறுப்பினராகவும் இணைந்தேன்.

1964-ஆம் ஆண்டு, சென்னைக்கு வேலைக்கு வந்தேன். அப்போது, இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக இருந்த காலம். **‘தமிழ் முழக்கம்’** என்கிற எனது நூலுக்கு கலைஞரிடம் வாழ்த்துரை வாங்குவதற்காக, எங்கள் ஊர் எம்.எல்.ஏ.வை அணுகினேன்.

ஒரு வாரம் கழித்து, என்னை அழைத்து வரச் சொல்லி இருக்கிறார். நான் சென்றதும், என்னைப் பாராட்டியதுடன், வாழ்த்துரையும் அளித்து ஊக்குவித்தார். அன்று அறிமுக மானது முதல், அவரின் இறுதி காலம் வரை அதே தமிழுணர்வுடன் என்னிடம் கொண்டிருந்த அன்பு மாறவே இல்லை. அதே உணர்வுதான் எனக்கும். நான் கலந்துகொள்ளும் எந்தக் கூட்டத்திலும், கலைஞர் குறித்து, யாரும் காழ்ப்புணர்ச்சியுடன் பேசினால், விட்டுக் கொடுத்ததுமில்லை. அந்த இடத்திலேயே எனது எதிர்ப்பினைப் பதிவு செய்து விடுவேன்.

### கட்சியை எப்படி மறப்பது?

மொழி வளர்ச்சிக்காக **‘தமிழ் முன்னேற்றக் கழகம்’**, உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்க, **‘பன்னாட்டுத் தமிழுணர்வு மன்றம்’** எனப் புதிய புதிய முயற்சிகளைத் தொடங்கிய போதெல்லாம் ஒத்துழைப்பு நல்கி இருக்கிறார் கலைஞர். ஈழத் தமிழர் ஆதரவுக்காக, தமிழ் இயக்கங்களை எல்லாம் ஒருங்கிணைத்து, **‘தமிழ்நடைப் பயணம்’** என சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை பயணம் சென்றோம். அந்த நிகழ்ச்சியின் முழக்கங்களுடன் கலைஞரைச் சென்று சந்தித்தேன்.

“தமிழா ஜாதியை மற; தமிழை நினை. தமிழா மதத்தை மற; தமிழை நினை. தமிழா கட்சியை மற; தமிழை நினை. தமிழா மன்றங்களை மறந்து; ஒன்றுபடு” என தயார் செய்திருந்தோம். வாங்கிப் பார்த்தவர், “கட்சியை மற” எனச் சொல்லி இருக்கீங்களே, “நான் எப்படி கட்சியை மறப்பது?” எனக் கேட்டதுடன், “ஓ... கட்சி வேற்றுமையை மறக்கச் சொல்றீங்களா?” எனக் கூறியதுடன், அந்த நிகழ்ச்சிக்கு வாழ்த்தும் அளித்து அனுப்பினார்.

### “சேர்ந்து திட்டுங்கள்!”

நான் எல்லோருக்கும் பொதுவாக இயங்கியதால், அனைத்துத் தரப்பினரும் என்னைக் கூட்டங்களுக்கு அழைப்பர். ஆனால், ‘கலைஞர் ஆள்’ என்ற முத்திரையும் உண்டு. கலைஞரை எப்போதும் காழ்ப்புடன் அணுகும் ஒரு பிரிவினர் ஈழப் போராட்டம் தொடர்பாக கூட்டம் ஒன்று நடத்தினர். அதற்கு என்னை அழைத்திருந்தனர். அதை அறிந்த கலைஞர், தொலைபேசியில் அழைத்தார்.

“பெருங்கவிக்கோ அந்தக் கூட்டத்தில், எல்லோரும் என்னைத் திட்டுவார்கள். நீங்களும் சேர்ந்து திட்டிவிட்டு வாருங்கள்” என கோபப்பட்டார். “அண்ணே, நான் எந்த இடத்திலும் உங்களை விட்டுக் கொடுத்ததில்லை என்பது உங்களுக்கே தெரியும். நமது கருத்துகளை வலிமையாகச் சொல்வேன்” என விளக்கம் கொடுத்தேன். அன்றிரவு 12 மணி இருக்கும், மீண்டும் தொலைபேசி செய்து, “என்ன பேசினீங்க?” எனக் கேட்டுக் கொண்டார்.

### தமிழ்க் கடவுள் இல்லையா?

எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. சபரிமலைக்கு மாலை போடுவேன். அப்படி ஒருமுறை, மாலை போட்டிருந்தபோது, கலைஞரைச் சந்திக்கச் சென்றேன். என்னைப் பார்த்தவர் கொஞ்சம் கோபத்துடனேயே “என்னய்யா இது?” என்றார்.

“அண்ணே சபரிமலைக்கு” என்றேன். “ஏன்யா.. இங்க உள்ள கடவுள் எல்லாம் ஆகாதா? திருச்செந்தூர், பழனி என நம்ம ஊர்லயும் கோயில் இருக்கே” என்கிறார். நானும் விடாமல், “அண்ணே இஸ்லாமியர்கள் மெக்கா, மெதீனா செல்வதில்லையா” என சொல்லிமுடிக்கவில்லை. அவருக்கு கடும்கோபம், “என்னய்யா இப்படி சொல்றாரு?” என அருகில் இருந்த தமிழ்க்குடிமகனிடம் கோபத்துடன் சொல்கிறார்.

எங்கள் உரையாடல் இப்படியாக இருக்கும். பொதுவாக, நான் எதையும் வெளிப்படையாகப் பேசுபவன். எனது உணர்ச்சி வேகத்தையும் அவர் அறிவார். எம்.ஜி.ஆர் ஆட்சி காலத்தில், இந்திக்கு ஆதரவாக, நடந்த கூட்டங்களில் தனி ஆளாக எதிர்ப்பு முழக்கங்களை இட்டு, அடி உதைகளை வாங்கியவன். அதுபோல, கூட்டங்களில் கலைஞரின் தமிழுணர்வை யாராவது கேள்வி எழுப்பினால், அதே இடத்தில் பதில் கொடுப்பவன் எனவும் அறிவார். அதனால், எனது இயல்புடன் என்னைப் புரிந்து வைத்திருந்தவர் கலைஞர்.

### செம்மொழி அறப்போர்

வாஜ்பாய் ஆட்சி காலத்தில் தமிழுக்கு செம்மொழி தகுதி பெற பல முயற்சிகளை மேற்கொண்டார் கலைஞர். டெல்லியில் தி.மு.க ஆதரவுடன் உண்ணாநிலை அறப்போர் நடத்தி, குடியரசுத் தலைவரிடம் மனு அளித்தோம். அந்தப் போராட்டப் பெருமை கலைஞருக்குச் சேரக்கூடாது என சில கட்சிகள் விரும்பின. ஆனால், அந்தப் போராட்டம் கலைஞர் வழிகாட்டுதலில், அவரது முழுஆதரவுடன் நடந்தது என நான் அழுத்தம் திருத்தமாக ஊடகத்தினரிடம் வலியுறுத்தியவன். அப்படி, அவரை விட்டுக் கொடுக்காமலும், அதே நேரத்தில் எந்த எதிர்பார்ப்புகளுமற்று, தமிழுக்குத் தொண்டாற்றுபவன் என்பதால்தான், கோவை செம்மொழி மாநாட்டில், கவியரங்க நிகழ்வைத் தலைமையேற்க என்னைத் தேர்வு செய்தார் கலைஞர்.

### தமிழுக்கு மரியாதை!

எனது மூன்று பிள்ளைகளின் திருமணம் கலைஞர் தலைமையில்தான் நடந்தன. 1991-ஆம் ஆண்டில் ஆட்சிக் கலைப்புக்கு முதல் நாள். மதுரையில் எனது மகன் திருமணத்துக்கும், பொன்.முத்துராமலிங்கம் இல்லத் திருமணத்துக்கும் வருகை தருகிறார். அந்தச் சூழலில் வராமல் தவிர்த்திருக்கலாம். ஆனால்,

> **“அண்ணே, நான் எந்த இடத்திலும் உங்களை விட்டுக் கொடுத்ததில்லை என்பது உங்களுக்கே தெரியும். நமது கருத்துகளை வலிமையாகச் சொல்வேன்!”**

வருகை தந்தது, என் மீது கொண்ட பேரன்பு என்பேன். அது எனக்குக் கிடைத்தது அல்ல; தமிழ்மொழிக்கு அவர் கொடுத்த மரியாதை யாகவே நினைத்துக் கொள்வேன்.

ஆட்சியில் இருந்தாலும், இல்லையெனினும் மொழிக்கான களப்போருக்கு முழுமையான ஆதரவையும், வழிகாட்டுதலையும் வழங்கியவர் கலைஞர். அவரோடு ஒன்றிய உணர்வாளராக இருந்தவன் என்பதால்தான், 90 வயதைத் தொடும் நிலையிலும், **‘கலைஞர் காவியம்’** என 700 பக்க நூலை படைத்திருக்கிறேன். அது; என்னை ‘பெருங்கவிக்கோ’ என பெயர் பெற வைத்த கலைஞருக்கு நான் முன்வைக்கும் கவிதைக் காணிக்கை.

....பகிர்வார்கள்

---

## வைகை நதி ஏன் வறண்டு போகிறது?

‘**கா**விரி நீரோவியம்’ என்கிற நூல் மூலம் காவிரி நீர் உரிமைத் தொடர்பான அனைத்துப் பக்கங்களையும் அலசியவர் எழுத்தாளர் சூர்யா சேவியர். தற்போது வைகை நதி நீர் தொடர்பான நூல் தயாரிப்பில் உள்ளார். மூணாறு முதல் இலங்கையின் காலிமுகம் வரை 150 அத்தியாயங்களைக் கொண்டு வெளிவர உள்ள ‘வைகை நதிகாசம்’ என்கிற இந்த நூல், செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்படும் எனவும் அறிவித்துள்ளார். இந்த நூல் குறித்து, அவ்வப்போது அவர் வெளியிட்டு வரும் கருத்துகளில், வைகை நதி ஏன் வறண்டு போகிறது? என்பதும், அதன் அரசியலும் கவனிக்க வைக்கிறது. இது அவரின் பதிவிலிருந்து,

“மதுரை பாண்டிய அரசப் பரம்பரைகளில் ஒன்று ‘பூஞ்சார் ராஜ்யம்’. இப்பேரரசை நிறுவியவர் மான விக்ரம குலசேகர பாண்டியன் என வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய திண்டுக்கல், கம்பம், போடிநாயக்கனூர், வண்டிப்பெரியார், பீர்மேடு, தேவிக்குளம், மூணாறு போன்ற பகுதிகளை உள்ளடக்கியதே பூஞ்சார் ஆட்சி. மூணாறும் பூஞ்சார் ஆட்சியின் ஒரு பகுதிதான். கேரளத்தில் ஆறுகளை புழை என்று அழைப்பார்கள். ‘புழா’ என்று முடியும் ஊர்கள் கேரளத்தின் ஒவ்வொரு அரை மணி நேரப்பயணத்திலும் புழையைப் போலவே தொடர்ந்து கொண்டிருக்கும்.

தமிழில் ஆறு என்றே அழைப்பதால், மூன்று ஆறுகள் சங்கமிக்கும் பொருளில் மூணாறு என்கிறார்கள்.

முதிரப்புழா-குண்டலை-நல்லதண்ணி ஆகியவையே அந்த மூன்று ஆறுகள். இப்பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டு இருந்தால், தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, முகவை மாவட்டங்கள் செழித்திருக்கும். வைகை மூர்ச்சை இழந்திருக்காது.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டப்போது தமிழ் நிலப் பகுதிகளான இப்பகுதிகளை கேரளத்திற்குள் கொண்டு சென்றார்கள். ‘ஏன் இப்படி செய்தீர்கள்?’ என அன்றைய முதல்வர் காமராஜரிடம் கேட்டார்கள். அதுவும் இந்தியாவிற்குள்தானே இருக்கிறது என்று அவர் பதில் கூறினார். அவர் தோற்றதற்கும், திராவிட இயக்கம் வென்றதற்குமான அரசியல் அவர் சொன்ன பதிலில்தான் இருக்கிறது.”

---

## :ப்ளாஷ்பேக்



### “ஆதரவு அளித்து, வாழ்த்து பெற்றோம்!”



ம.ஹே.தமிழ் முகிலன்

2011-ஆம் ஆண்டு, முல்லை- பெரியாறு அணை விவகாரத்தில், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட, அன்றைய கழகப் பொருளாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில், மாபெரும் உண்ணா நிலை அறப்போராட்டம் நடைபெற்றது. சென்னை, சானிடோரியத்தில் நடைபெற்ற அறப் போராட்டத்தில், அப்பகுதி கிளைச் செயலாளராக இருந்த எனது தந்தை நா.மணிசேகரன் முன்னின்று வேலைகள் செய்தார். மேடையில், அமர்ந்திருந்த தளபதி அவர்களிடம் என்னையும், எனது சகோதரி ம.ஹே.எழிலரசியையும் அழைத்துச் சென்று ஆதரவு அளிக்கவும், வாழ்த்தும் பெற வைத்தார்.

– ம.ஹே.தமிழ் முகிலன், சித்தார்த்தா நகர், தாம்பரம், சென்னை தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### நிர்வாகிகளும் உறுப்பினர் சேர்க்கையும்

1949-ஆம் ஆண்டு கழகம் தொடங்கப்பட்டவுடன், நியமனங்கள் மூலம் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வந்தனர். உறுப்பினர்களும் ஆங்காங்கே சேர்க்கப்பட்டு வந்தனர். 1952-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்துதான், ஒட்டுமொத்தமாக அறிவிப்பின் மூலம் முதன்முதலாக உறுப்பினர் சேர்க்கும் பணியையும், அதற்கான வழிமுறைகளையும் வெளியிட்டது தலைமைக் கழகம். இதன்மூலம் கழகம், தேர்தல்களின் வழியாக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு தயாரானது.


---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

517

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131